மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ம் நாள் வியாழக்கிழமை
அ.வ.எண். 55/2019

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: ஆறுமுகக்கனி தேதி : 19.02.26
வயது : க/பெ : கனகராஜ்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

19.02.26 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 2ம் வாதி மற்றும் வாதிகள் தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

03.07.1981ம் தேதி தபசில் சொத்தினை 1ம் வாதியின் கணவர் அரிராம நாடார் கிரையம் வாங்கியதற்கான ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆகும். 02.11.1989ம் தேதி 1ம் வாதி தபசில் சொத்தினைப் பொறுத்து பதிவு அடைமானம் பிறப்பித்துக் கொடுத்ததற்கான ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆகும்.பட்டா எண்.765 ன் உண்மை நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆகும். 06.04.2016ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலினை தாக்கல்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.23 17:32:31 +0530

செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆகும். 09.04.2016ம் தேதிய அஞ்சல் ஒப்புதல் அட்டை அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆகும்.

நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகும். ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகும். ஆணையர் தாக்கல் செய்துள்ள புல எண்.85ன் வரைபடம் மற்றும் அடங்கல் ஆவணங்கள் நீ.ம.சா.ஆ.3 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.23 17:32:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.